**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-172/2023**

**List of Witness LW1 Examined as PW1 ( complainant)**

| | | | |
|---|---|---|---|
| Name | செந்தில்குமார் | Caste: | |
| Father's name | சங்கரன் | Calling: | கூலிவேலை |
| Village | கல்லுக்காரன்பட்டி புதூர் | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வகோட்டை | Age: | 49 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.05.2024

( எதிரி ஆஜர் )

முதல் விசாரணை

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்த சுப்பையா எனக்கு மாமா உறவு முறை. 10.02.20203ம் தேதி காலை 9 மணியளவில் கல்லுக்காரன்பட்டியில்லுள்ள நெல் கொள்முதல் நிலையத்திற்கு நானும் எனது மாமா சுப்பையாவும் என்னுடைய இருசக்கர வாகனமான டிவிஎஸ் எக்சல் 1941 ல் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தோம். அப்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இருசக்கர வாகனமான எண் 6031 ல் வந்த வண்டியில் ராஜபாண்டி வண்டியை ஓட்ட திருச்செல்வம் பின்னால் அமர்ந்திருந்தார், அந்த வண்டி எங்கள் வண்டியை அடித்து தூக்கி விட்டார்கள், நாங்கள் இருவரும் மயக்கமாகிவிட்டோம். 108 ஆம்புலன்சில் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். ஆஜர் எதிரிதான் அன்று வாகனத்தை ஓட்டினார்.

2) பின்னர் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றோம். 13ம் தேதி என் மாமா சுப்பையா இறந்துவிட்டார். நான் சிகிச்சையில் இருந்தபோது என்னிடம் போலிசார் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது. **(**புகார் வாக்குமூலம் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1) கல்லுக்காரன்பட்டியில் இருந்து குடோனுக்கு செல்வதற்கு ரோட்டை கடக்கும்போதுதான் விபத்து என்றால் சரியல்ல, ரோட்டை கடந்துவிட்டோம். தெற்கிலிருந்து வடக்கு செல்லும் வண்டி நாங்கள் கடந்த ரோட்டின் தளத்தில்தான் செல்லவேண்டும் என்றால்

சரிதான். எங்கள் வண்டியின் பின்பகுதியில்தான் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நானும் எனது மாமாவும் அடிப்பட்டவுடன் நிதானம் இழந்துவிட்டோம் என்றால் என் மாமாவிற்கு நினைவு இல்லை, எனக்கு நினைவு இருந்தது. கந்தர்வகோட்டை மருத்துவமனைக்கு யார் எங்களை கொண்டுவந்தது என்றால் அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்கள்.

2) மோதியதாக சொல்லும் வண்டியின் எண்ணை போலிசார் சொன்னார்கள் என்றால் சரிதான். மோதிய வண்டியை யார் ஓட்டியது என்ற விபரத்தையும் போலிசார் சொன்னார்கள் என்றால் சரிதான். நான் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான், விசாரித்து என்னிடம் வெள்ளைத்தாளில் கையெழுத்து வாங்கிகொண்டார்கள் என்றால் சரிதான். எனது மாமாவிடம் விசாரித்தார்கள் என்றால் இல்லை , என் மாமாவால் பேச முடியவில்லை.

3) விபத்து நாங்கள் குறுக்காக வந்த வாகனத்தை கவனிக்காமல் நாங்கள் சென்றதால்தான் மற்றும் எங்களுடைய கவனக்குறைவினால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனது மாமாவின் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக நான் பொய்யாக புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பின்னர் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள்.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-172/2023**

**List of Witness LW2 Examined as PW2 (Eye Witness)**

| | | | |
|---|---|---|---|
| Name | மொக்கையா | Caste: | |
| Father's name | சின்னத்தம்பி | Calling: | கூலிவேலை |
| Village | கல்லுக்காரன்பட்டி புதூர் | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வகோட்டை | Age: | 40 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.05.2024

( எதிரி ஆஜர் )

முதல் விசாரணை

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்த சுப்பையா எனக்கு அண்ணன் உறவு முறை. அ.சா.1 எனது மச்சான். கடந்த வருடம் 2 வது மாதம் தேதி ஞாபகத்தில் இல்லை. சுமார் காலை 9 மணியளவில் நான் வேலைக்கு செல்வதற்காக கல்லுக்காரன்பட்டி பேருந்து நிலையத்திற்கு செல்வதற்காக சென்றுகொண்டிருந்தேன். ஆஜர் எதிரி தெற்கிலிருந்து இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தார், நெல்லுக்குடோன் செல்வதற்காக அவர்கள் திரும்பிவிட்டார்கள். ஆஜர் எதிரி வேகமாக வந்து சுப்பையாவும், செந்தில்குமாரும் சென்ற வாகனத்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார்.

2) ஆம்புலன்சிற்கு போன் செய்து கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். ஆஜர் எதிரியை சம்பவத்தன்று நான் பார்த்தேன். செந்தில்குமாருக்கு லேசான காயம் இருந்தது, சுப்பையா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

செந்தில்குமாரையும், சுப்பையாவையும் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருந்தோம் என்றால் சரிதான். மருத்துவமனையில் செந்தில்குமார் விபத்து ஏற்பட்ட விபரம் குறித்து சொன்னார் என்றால் சரிதான். இரண்டு வாகனங்களின் எண்ணும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது

என்றாலும் புகார்தாரர் எனது மச்சான் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-172/2023**

**List of Witness LW4 Examined as PW3 (Observation Mahazar Witness)**

| | | | |
|---|---|---|---|
| Name | சின்னத்துரை | Caste: | |
| Father's name | வேலு | Calling: | விவசாயம் |
| Village | கல்லுக்காரன்பட்டி புதூர் | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வகோட்டை | Age: | 40 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.05.2024

( எதிரி ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.02.2023ம் தேதி மாலை 3.30 மணியளவில் கல்லுக்காரன்பட்டியில் உள்ள பஸ்ஸ்டாப்பில் பேருந்து ஏறுவதற்காக நின்றுகொண்டிருந்தேன். அப்போது ஆதனக்கோட்டை சார்பாய்வாளர் வந்து விபத்து நடந்த இடத்தை பொறுத்து வரைபடம் வரைந்து, என்னைப்பற்றி விசாரணை செய்து பின்னர் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், நான் கையெழுத்து செய்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

செந்தில்குமார், சுப்பையா எனக்கு என்ன வேண்டும் என்றால் ஊர்க்காரர்கள். என்னுடன் வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல, பழனிச்சாமி கையெழுத்து செய்தார். போலிசார் என்னை கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல, நான் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு வரவில்லை. நான் செந்தில்குமார் எனது ஊர்க்காரர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பார்வைமகஜரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**சாட்சியின் கையொப்பம்**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-172/2023**

**List of Witness LW5 Examined as PW4 (Observation Mahazar Witness)**

| | | | |
|---|---|---|---|
| Name | பழனிச்சாமி | Caste: | |
| Father's name | மாணிக்கம் | Calling: | கூலிவேலை |
| Village | கல்லுக்காரன்பட்டி புதூர் | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வகோட்டை | Age: | 34 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.05.2024

( எதிரி ஆஜர் )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.02.2023 ம் தேதி மாலை 3.30 மணியளவில் கல்லுக்காரன்பட்டியில் உள்ள பஸ்ஸ்டாப்பில் புதுக்கோட்டை செல்வதற்கு பேருந்து ஏறுவதற்காக நின்றுகொண்டிருந்தேன். அப்போது ஆதனக்கோட்டை காவல்நிலையத்திலிருந்து போலிசார் வந்து விபத்து நடந்த இடத்தை பொறுத்து வரைபடம் வரைந்து, விசாரணை செய்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், நான் கையெழுத்து செய்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பார்வைமகஜரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். செந்தில்குமார் எனது உறவினர் என்றால் சரிதான். செந்தில்குமார் எனது உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.